பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 213

சனிக்கிழமை
28 ஜூன் 2025

ஆனி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## பலாலி சந்தையை விடுவிக்குக

விரிவு பக்:- 03

# காணி சுவீகரிப்பு வர்த்தமானி உடனடியாக இடைநிறுத்தம்!

### உயர் நீதிமன்றம் உத்தரவு

**கொழும்பு, ஜூன் 28**

**வடக்கில் காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பில் பிறப்பிக்கப்பட்ட வர்த்தமானியை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்துள்ளது.**

11

வவுனியா

## வடக்கு பிரதேசசபையை கைப்பற்றியது தமிழரசு!

### தவிசாளராக கிருஷ்ணவேணி



வவுனியா, ஜூன் 28
வவுனியா வடக்கு பிரதேசசபையை இலங்கைத் தமிழரசுக்கட்சி கைப்பற்றியுள்ளது. தவிசாளரான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் திருநாவுக்கரசு கிருஷ்ணவேணி

11

வவுனியா தெற்கு

## தமிழ்ப் பிரதேசசபையிலும் தமிழரசுக்கட்சி ஆட்சி!



வவுனியா, ஜூன் 28
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது. தவிசாளராக பாலகிருஸ்ணன் பாலேந்திரன் தெரிவுசெய்யப்

11

யாழ். மாநகரசபையில்

## நிலையியல் குழுக்களை நியமிப்பதில் குழப்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 28
யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிலையியற் குழுக்களை தெரிவதற்காக, மாநகரசபை சபா மண்டபத்தில் நேற்று கூட்டப்பட்ட விசேட அமர்வு குழப்பத்தில் முடிவடைந்துள்ளது.
யாழ்ப்பாணம்

11

## உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள்; நீதியை நிலைநாட்டுவதில் உறுதி!

கொழும்பு, ஜூன் 28
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் பொறுப்புடன் இடம்பெற்று வருகின்றன. இந்த விடயத்தில் நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும் என்று பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில்

11

## மோட்டார்சைக்கிள் விபத்து குடும்பப்பெண் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 28
யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த குடும்பப் பெண்ணொருவர் சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்

12

## செம்மணிப் புதைகுழிக்குள் நேற்றும் இரு சிதிலங்கள்!



யாழ்ப்பாணம், ஜூன் 28
யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி இந்துமயானத்திலுள்ள மனிதப் புதைகுழியில் நேற்று மேலும் இரண்டுமனிதச்சிதிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
சித்துப்பாத்தி புதைகுழி, 'மனிதப்புதைகுழி' என்று நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்

11



போதைமாத்திரை;

## இளைஞர் கைது!

யாழ்., ஜூன் 28
யாழ்ப்பாணம் சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் போதைமாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
பொலிஸ் விசேட அதிர

12

## படையினரின் சடலங்களே செம்மணிப் புதைகுழிக்குள்

### உருட்டுகிறார் தயாரத்ன தேரர்

கொழும்பு, ஜூன் 28
செம்மணிப்புதைகுழி விவகாரத்தை மீளத் தோண்டுவதன்மூலம் இவர்கள் எதிர்பார்ப்பது என்ன? புலிகளால் கொல்லப்பட்ட படையினரின் சடலங்கள்கூட அங்கு இருக்கக்கூடும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணம் - செம்மணி

11

சித்துப்பாத்தி மயானத்தில்

## அகழ்வுப் பணிகள் ஒருபுறம்; தகனக்கிரியைகள் மறுபுறம்

யாழ்ப்பாணம், ஜூன் 28
அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில், பெரும் சிரமத்துக்குள்ளும் அசௌகரியமான சூழ்நிலைகளுக்கும் மத்தியில் அர்ப்பணிப்புடன் அகழ்வுப் பணிகளை பேராசிரியர் ராஜ்சோமதேவ தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

11

### முச்சந்தி முரளி

'இப்பிடியான ஆக்களாலதான் நாங்கள் வெளிநாட்டுப் பொறிமுறை தேவையெண்டு விடாப்பிடியா நிக்கிறம் கண்டியளே...!'

## வோல்கர் ட்ரக்கின் பயணம் புலிகளின் நிகழ்ச்சி நிரலே!

### விமல் வீரவன்ஸ விஷமத்தனம்



கொழும்பு, ஜூன் 28
விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கை அரசாங்கத்தை சிக்கவைக்கும் நோக்கிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கைப் பயணம் அமைந்துள்ளது என்று விமல் வீரவன்ஸ தெரிவித்துள்

11

யாழ்ப்பாணத்துக்கு

## பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டார் மாரப்பன!





விரிவு பக்கம்:- 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4115 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 42 55 62 74 |
| விசேட எழுத்து | C |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1182 |
| வெற்றி இலக்கினம் | மகம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 25 35 51 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0141 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 4 3 4 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2221 |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கங்கள் | 14 39 43 54 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5873 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 8 4 5 2 6 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1903 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 38 53 57 79 |
| விசேட எழுத்து | A |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0448 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 5 2 6 3 |

# சர்வதேச நீதிமன்றக் கூண்டில் இலங்கையை முன்நிறுத்துக!

## கிழக்கு மாகாணப் பிரதிநிதிகள் ஐ.நா. ஆணையாளரிடம் எடுத்துரைப்பு

**திருகோணமலை, ஜூன் 28**

**இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளமை ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்நிறுத்தவேண்டும். இலங்கை அரசைத் தாங்கள் நம்பத் தயார் இல்லை. சர்வதேச நீதிப்பொறிமுறையே வேண்டும் என்று ஐ.நா. ஆணையாளரிடம் திருகோணமலை சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் எடுத்துரைத்துள்ளனர்.**

திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐ.நா. சபையின்மனிதஉரிமைஉயர்ஆணையாளர் வோல்கர் டரக், கிழக்கு மாகாணத்தில் செயற்படுகின்ற சிவில் அமைப்புப் பிரதிநிதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் மற்றும் சட்டத்தரணிகள் உள்ளிட்ட சிலரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர்கள் இதனைச் சுட்டிக்காட்டினர்.

தமிழ்பேசும் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்கும்வகையில் தமிழ் மக்களின் காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்பட்டு வருகின்றன. இதுவும் ஒரு இன அழிப்பே. பாதிக்கப்பட்ட மக்களின் அபகரிக்கப்பட்ட காணிகளை அவர்களிடத்தில் கையளித்து அவர்களின் குடியிருப்பு மற்றும் தொழில் நடவடிக்கைகளுக்கு உதவவேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் 30 ஆண்டு காலமாகத் தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது? தங்களால் கையளிக்கப்பட்ட உறவுகள் இன்னும் தங்களிடம் மீள வழங்கப்படவில்லை எனப் போராடிவருகின்றனர். அதற்குச் சர்வதேசநீதிப் பொறிமுறைதான் எங்களுக்குத் தேவை.

வடக்கு - கிழக்கில் 40க்கு மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன. 21 புதைகுழிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் இந்த உடலங்களை ஆய்வுசெய்வதற்கு சர்வதேச நிபுணர்களை இங்கே அழைத்து அவர்கள் கண்காணிப்பில் இந்த அகழ்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர்கள் ஐ.நா. ஆணையாளரிடம் குறிப்பிட்டனர்.

இதன்போது பதிலளித்த ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணையாளர் வோல்கர் ட்ரக், இந்த விடயங்கள் இலங்கையில் இருப்பதாகத் தான் உணர்ந்தேன், இதற்கான தீர்வினை இந்தத் தேசத்துடன் இணைந்து தான் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

நீதிப்பொறி முறை சார்ந்த விடையங்களில் அதிக கவனம் செலுத்தவேண்டியிருக்கின்றது. அதேபோல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதிப் பொறிமுறையினை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதியிடம் வலியுறுத்துவேன்- என்றார். (ச-50)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0581 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 2 2 0 7 3 8 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2847 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 20 31 39 73 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 15 27 32 62 |
| வெற்றி வாரம் | 5008 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0713 |
| வெற்றி இலக்கம் | 05 25 26 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| மேஷம் | ♈ |
| வெற்றி இலக்கம் | 15 17 40 50 |
| சீட்டிழுப்பு வாரம் | 4559 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கம் | 44 57 58 60 |
| வெற்றி வாரம் | 2023 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 27.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 07 43 49 62 |
| வெற்றி வாரம் | 2673 |

# காணிகளை விடுவித்துவிட்டு துறைமுகத்தை சீரமைக்குக

## *மயிலிட்டி மக்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூன் 28

மயலிட்டித் துறைமுகத்துக்கு அருகாமையில் உள்ள காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. அதனை விடுவித்து கண்துடைப்புக்கு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு பிரயோசனம் இல்லை என்று கடற்றொழிலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்.மாவட்டக் கடற்றொழில் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது கடற்றொழில் அமைச்சர் மயிலிட்டித் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த இந்திய இழுவைமடிகளை அகற்றி புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதுகுறித்து மேலதிக அபிவிருத்தி தொடர்பில் உங்கள் கருத்துகளைப் பதிவுசெய்யுமாறு மீனவர்களை கோரியபோதே அவர்கள் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினர். (ச-125)

# தமிழர்கள் மீதான அட்டூழியம் செம்மணிப் புதைகுழியே சாட்சி

## *அமெ.காங்கிரஸ் உறுப்பினர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 28

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அட்டூழியங்களை செம்மணியிலுள்ள புதைகுழிகள் வேதனையுடன் நினைவூட்டுகின்றன என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டொன் டேவிஸ் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகப் பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாம் உண்மையிலிருந்து விலகிச்செல்லமுடியாது. இலங்கையில் காணாமற்போனவர்களுக்கு ஒரு சர்வதேச சுயாதீன விசாரணையையும் பொறுப்புக்கூறலையும் கோருகின்றது என அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம் , ஜூன் 28

15 வயது சிறுமியொருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் பலாலி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

15 வயது சிறுமியொருவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதன்போது மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் குறித்த சிறுமி 6 மாதக் கர்ப்பிணியாக உள்ளார் என்பது தெரியவந்தது. அதனையடுத்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை சாக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-125)

# நெடுந்தீவுப் பிரதேசசபை; வெற்றிடங்களை நிரப்புக

## பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 28

நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலர் மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் நியமிக்கப்படாதுள்ளனர். மிக முக்கியமான இந்தப் பதவிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புவியியல் ரீதியாகப் பல சவால்களை எதிர்கொள்ளும் பிரதேசமாக நெடுந்தீவு உள்ளது. மக்களின் தேவைகள், குறைபாடுகளை அதிகம் கையாளும் பிரதேச செயலகமாக நெடுந்தீவுப் பிரதேச செயலகம் உள்ளது. பிரதேச செயலகத்துக்குக் கணக்காளர் ஒருவர் நியமிக்கப்படாத நிலையில், பதில் கணக்காளர் ஒருவரே மாதம் ஒருமுறை வந்துசெல்கின்றார். நெடுந்தீவுப் பிரதேச செயலரும் இடமாற்றலில் செல்லவுள்ளார் என்று யாழ். மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆகையால் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பலாலிச் சந்தையை விடுவித்துத் தருக!

## வலி.வடக்குப் பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

**யாழ்ப்பாணம், ஜூன் 28**

**வலிகாமம் வடக்குப் பிரதேசசபைக்குச் சொந்தமான இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பலாலி சந்தையை விடுவித்துத் தருமாறு கோரி வலிகாமம் வடக்குப் பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் கன்னி அமர்வு நேற்றுப் பிரதேசசபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது தவிசாளர் தனது உரையில்,

எங்களுடைய மக்கள் இன்னமும் 2ஆயிரத்து 400 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களில் மீள்குடியேற்றப்படாமல் இருக்கின்றார்கள், அவர்களை மீள்குடியேற்றுவதற்காக எங்களுடைய சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் அனைவருடைய ஒத்துழைப்பும் தேவையாக இருக்கின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் மீள்குடியேற்ற அமைச்சினால் சுமார் 182 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தபோதும் அதற்கான வேலைத்திட்டங்கள் இன்னமும் ஆரம்பிக்கப்பட்டால் இருக்கின்றன. அதற்கான மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படாதநிலையில் அதனை விரைவுபடுத்த வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது - என்றார்.

தொடர்ந்து பிரதேசசபைக்குச் சொந்தமான பலாலி சந்தையை விடுவித்துத் தருமாறுகோரி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானம் மாவட்ட இராணுவ தளபதிக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் எழுத்துமூலம் அனுப்பப்படும் என்றும் சபையில் தவிசாளர் தெரிவித்துள்ளார். (ச-26)



# சேவையின்றி வடதாரகை!

யாழ்ப்பாணம், ஜூன் 28

நெடுந்தீவுக்கான படகுச்சேவைகளில் ஒன்றான வடதாரகை சுமார் ஒரு மாத காலத்துக்கு மேலாக சேவையில் ஈடுபடாது கடற்கரையில் பழுதடைந்த நிலையில் தரித்து விடப்பட்டுள்ளதாகப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

நெடுந்தாரகை மற்றும் சமுத்திர தேவா மற்றும் குமுதினி படகுகளின் மூலமே தற்போது பயணிகள் பயணிக்கின்றனர்.

எனவே வீதி அபிவிருத்தி அதிகாரசபை விரைந்து வடதாரகையை மீளசேவைக்குக் கொண்டுவர நடவடிக்கையை துரிதப்படுத்தவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ச-125)

# யாழில் இரு வாரங்களுக்கு வெள்ளை ஈ கட்டுப்படுத்தல்

## ஜூலை 14 முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்.மாவட்டத்தில் வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை ஜூலை மாதம்14 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக இரண்டு வாரங்களுக்கு ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனை சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்காகக் கொழும்பிலிருந்து 100 இயந்திரங்கள் கொண்டு வரப்படவுள்ளன. அத்துடன் அதனை இயக்குவதற்கான ஆளணியினரும் அழைத்து வரப்படவுள்ளனர். யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, உடுவில், கோப்பாய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே இதனை முதல் கட்டமாகச் செயற்படுத்தவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-66)

# கல்லுண்டாயில் கழிவுகள் எரியூட்டல்; கண்டனத் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணம் கல்லுண்டாய்வெளியில் அமைந்துள்ள குப்பைமேட்டைத் தொடர்ச்சியாக எரியூட்டும் யாழ். மாநகரசபையின் செயற்பாட்டுக்கு எதிராக வலிகாமம் மேற்குப் பிரதேசசபையால் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் கூட்டம் சபையின் தவிசாளர் ச. ஜயந்தன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த தவிசாளர்,

கல்லுண்டாய்வெளிக் குப்பைமேடு தொடர்ச்சியாக எரியூட்டப்படுவதால் எமது பிரதேசமக்கள் தொடர் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இதனால் சூழலும் பாதிக்கப்படுகின்றது.

ஆகவே யாழ். மாநகரசபையின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து- எமது பிரதேச மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு - எதிர்வரும் காலங்களில் இதனைத் தடுத்து நிறுத்துவதற்குத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு அனுப்பிவைக்கநடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

சபை உறுப்பினர்கள் குறித்த தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்த நிலையில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## ஒரு பொம்மலாட்டம் நடக்குது

முதல் கோணல் முற்றும் கோணல் எண்டுவினம். யாழ்ப்பாண மாநகரசபை அடுத்த அஞ்சு வருசத்துக்கு குழப்படிச் சபையா மட்டும்தான் இருக்கப்போகுது எண்டதை கன்னி அமர்விலேயே தெரிஞ்சுபோட்டுது. முதல்நாள் கன்னி அமர்வில சுகாதாரக்குழுத் தெரிவில கடும் இழுபறி. அந்தக் குழுவில வீணைக்கட்சிக்கு இடம் குடுத்தால், தங்களுக்கும் இடம் தரோனும் எண்டு சங்குக்கார போர்க்கொடி தூக்கிட்டினம். அதால என்னமுடிவு எடுக்கிறதெண்டு தெரியாமல், அதோடயே கூட்டம் முடிஞ்சுபோட்டுது. அதைவிடத் தனக்கு மூண்டு பணியாளரைப் போடுறதுக்கும் அந்தக் கூட்டத்தில மேயர் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினவா. அதுக்கு சபையில இருந்தவையும் ஓமெண்டிட்டினம். ஆனால் அதுக்குப் பிறகுதான் அவைக்கு ஒரு விசயம் உறைச்சிருக்குது. கூட்ட நிகழ்ச்சிநிரலில மேயருக்கு மூண்டு பணியாளர் தேவை எண்ட விசயம் போடுப்படேலை. நிகழ்ச்சிநிரலில போடாத ஒரு விசயத்தை சபையில கொண்டந்து, அதுக்குச் சபையின்ர ஒப்புதலையும் எடுத்துப்போட்டினம்.

இப்பிடித் தங்களுக்கு தனிப்பட்ட உதவியாளர்கள் எண்டு முந்தி இருந்த மேயர்மார் சம்பளத்துக்கு ஆக்களை வைச்சிருக்கேலை. அப்பிடி மேயருக்குப் பணியாளர்மார் தேவை எண்டால், ஏற்கனவே மாநகரசபையில வேலை செய்யிற ஆக்களில இருந்து எடுத்துப்போடலாமேதவிர, வெளியாக்களைப் போடுறேலை. மாநகரசபையில உறுப்பினர்களா இருக்கிற கனபேர் இந்தமுறைதான் முதல்முதலா தேர்தலில நிண்டு மாநகரசபை உறுப்பினர்களானபடியால, அவைக்குச் சில நடைமுறையள் சரிவரத்தெரியேலை. கூட்டம் முடிஞ்சுபோனபிறகுதான் அவைக்கு இந்த விசயங்கள் எல்லாம் தெரியவந்திருக்குது. அதால ரண்டாம்நாள் அமர்வில இதுகளைப் பற்றிக் கதைக்கோனும் எண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போயிருக்கினம். இப்பிடித் தனக்கு இந்தக்கூட்டத்தில ஆப்பு வைக்கப்போயினம் எண்டதை மேயர் எப்பிடியோ மணந்து பிடிச்சிட்டா. அதால ரண்டாம் நாள் அமர்வை அரை மணித்தியாலத்தில நடத்தி, சுகாதாரக்குழுத் தெரிவு முடிஞ்சவுடன, வெளிக்கிட்டிட்டா.(கன்னி அமர்வில சுகாதாரக்குழுத் தெரிவைக்குழப்பியடிச்ச சங்குக்காரர், ரண்டாம் நாள் சைலண்டா இருந்தது ஏனெண்டதும் டவுட்தான்)

மேயர் இப்பிடி டக்கெண்டு கூட்டத்தை முடிச்சுக்கொண்டு வெளிக்கிட, "நாங்கள் மக்களின்ர சில பிரச்சினையளைச் சபையில கதைக்கோனும்" எண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்மார் சொல்லியிருக்கினம். அதுக்கு மேயர் "இப்ப கூட்டம் முடிஞ்சுது. அடுத்த கூட்டத்துக்கு அந்த விசயங்களைக் கதைப்பம் " எண்டிட்டு விடுவிடெண்டு நடக்கத் தொடங்க, சில எதிர்க்கட்சி உறுப்பினர்மார் அவாவைப் போகவிடாமல் மறிச்சபடி நிண்டிட்டினம். ரண்டாம் நாள் கூட்டத்துக்கும் ஒழுங்கான நிகழ்ச்சிநிரல் போடுப்படேலை எண்டும், மேயர் வேற ஆரோ சிலரின்ர சொல்லைக்கேட்டு நடக்கிறா எண்டும் எதிர்க்கட்சி உறுப்பினர்மார் முறைப்பாடு சொல்லுகினம். இப்பிடி இன்னொரு ஆள் குடுக்கிற 'வைனுக்கு' மேயர் ஆடுறபடியால் தான் இவ்வளவு குழப்பமாம். இனியும் உந்தக் குழப்பம் தொடரும் போலதான் தெரியுது. அமெரிக்கா தான் நினைச்சதுகளைச் செய்ய சில நாடுகளில பொம்மை ஆட்சியை அமைச்சுப் போட்டு, தன்ர தாளத்துக்கு அந்த நாடுகளை ஆட்டுவிக்கும். அப்பிடித்தான் யாழ்ப்பாண மேயரை ஆரும் ஆட்டுவிக்கினமோ எண்டு சனத்துக்கும் டவுட்டா இருக்குது. "ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே கண்ணா?"

\- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப் பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** இன்று நீங்கள் தொடங்க நினைக்கும் புதிய முயற்சி சாதகமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்

**கடகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். மாலையில் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாகமுடியும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். முயற்சிகள் வெற்றிகரமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியில் சென்றுவருவீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஆதரவாக இருப்பார். அலுவலகத்தில் அதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள்.

**கும்பம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு அலுவலகப்பணியின் காரணமாக வெளியூர் செல்லவேண்டிவரும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கித்தருவார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள்.




### உதைபந்துப்போட்டி

# மகாஜன பெண்கள் அணிகள் மாகாணச் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜுன் 28


2025 ஆம் ஆண்டுக்கான மாகாணப் பெருவிளையாட்டுகள் வரிசையில் உதைபந்தாட்டப்போட்டியில் யாழ்.மகாஜனக்கல்லூரியின் 17 வயதுப்பிரிவு மற்றும் 20 வயதுப்பிரிவு பெண்கள் அணிகள் மாகாணச் சம்பியனாகியுள்ளன. வயாவிளான் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்தப்போட்டி நடைபெற்றது. இதில் 17 வயதுப் பெண்கள் அணிக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் யூனியன் கல்லூரி அணியும் மகாஜனக் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன. இதில் யூனியன் கல்லூரி அணியை 5:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மகாஜனக்கல்லூரி அணி தொடர்ந்து 4ஆவது தடவையாக சம்பியனைத் தனதாக்கியது.

அதேவேளை 20 வயதுப் பெண்கள் பிரிவில் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன. 4:1 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் மகளிர் கல்லூரியை வீழ்த்தி மகாஜனக் கல்லூரி வெற்றி பெற்று தொடர்ந்து பத்தாவது முறையாக மாகாணச்சம்பியனாகியது. இதில் சிறந்த வீராங்கனையாக மகாஜனக் கல்லூரி மாணவி தரணிகா தெரிவுசெய்யப்பட்டார். (ச-25)

## பெருந்திருவிழா

யாழ், ஜுன் 28

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் அம்பலவாண விநாயகர் கோவில் வருடாந்த பெருந்திருவிழா ஜுலை முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் ஜுலை 9 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. பெருந்திருவிழாக் கிரியைகள் சிவஸ்ரீ க.ச.சோமாஸ்கந்த குருக்கள் தலைமையில் நடைபெறும். (ச-25,9)





### சாவகச்சேரியில்

# களவாடப்பட்ட 4 மோட்டர்களுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜுன் 28

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் களவாடப்பட்ட 4 மோட்டர்களுடன் இரண்டு சந்தேகநபர்களை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

பாடசாலை, ஆலயம், வீடு என மூன்று இடங்களில் தண்ணீர் இறைக்கும் மோட்டர்கள் திருடப்பட்டுள்ளதாக உரிமையாளர்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய உபபொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினர் முன்னெடுத்த விசாரணையிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சரசாலை,மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 23 வயதான இரண்டு சந்தேக நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சரசாலைக் காட்டுப்பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 4 மோட்டர்கள் மீட்கப்பட்டன. சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-26)

# நகுலேஸ்வரர் ஆலயத்தில் மணிக்கோபுர குடமுழுக்கு

யாழ்ப்பாணம் , ஜுன் 28

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மணிக் கோபுரத்துக்கான கும்பாபிஷேகம் நேற்று வெள்ளிக்கிழமை காலை6.35 மணியளவில் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் இடம் பெற்றது. ஆலயத்தின் முன்னாள் பிரதமகுரு மறைந்த நகுலேஸ்வரக் குருக்களின் முயற்சியின் பலனாக லண்டன் அறக்கட்டளை ஊடாகப் பல சிவ அடியவர்களின் ஒத்துழைப்புடன் புதிய காண்டா மணி லண்டன் மாநகரிலிருந்து எடுத்துவரப்பட்டுக் கடந்த மே மாதம் 3 ஆம் திகதி பிரதிஷ்டை செய்யப்பட்டது.

நகுலேஸ்வரக் குருக்களின் நூறாவது பிறந்தினத்தை முன்னிட்டு அவருக்குச் சமர்ப்பிக்கும்வகையில் புதிய மணிக்கூட்டுக் கோபுரத்திற்கான கும்பாபிஷேகம் இடம்பெற்றது. (ச-66)

### கைப்பந்தாட்டப் போட்டி

# கன்னியர்மடம் பாடசாலை வடக்கு மாகாணச்சம்பியன்



யாழ்ப்பாணம், ஜுன் 28

கைப்பந்தாட்டத்தில் 17 வயதின் கீழ் பெண்கள் அணியும் மேசைப்பந்தில் 18 வயதின் கீழ் அணியும் 16 வயதின் கீழ் அணியும் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. கைப்பந்தாட்டப் பயிற்றுவிப்பாளராக த. ராஜசோபனா , மேசைப்பந்து பயிற்றுவிப்பாளராக ச. சாமுவேல் ஆகியோர் கடமையாற்றினர். யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை கைப்பந்தாட்டப் போட்டியில் முதல் தடவை சாதனையீட்டியுள்ளதுடன் 20 வருடங்களின் பின்னர் மேசைப்பந்திலும் சாதனையை ஈட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

துணிவு இதில்தான் உங்களின் மேதைத்தனம், ஆற்றல், அற்புதம் என அனைத்தும் புதைந்து கிடக்கின்றன.

– கதே –

# மீண்டுமொரு வரலாற்று வாய்ப்பு!

'இலங்கை அதன் பொறுப்புக்கூறல் கடைமைகளில் தொடர்ந்தும் பலவீனமானதாகவே செயற்படுகின்றது. போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கையின் உள்ளகப் பொறிமுறையில் நம்பிக்கை இல்லையென்ற காரணத்தால்தான், அவர் கள் சர்வதேசப் பொறிமுறையைக்கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, சர்வதேசநியமங்களுக்கு அமையவே, போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரான வோல்கர் ட்ரக், கடந்த 23ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தின்போது இலங்கையின் உயர்மட்டத் தலைவர்களை அவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதுடன், பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்திருந்தார். அவர்களின் போராட்டக் களங்களுக்கும் சென்றிருந்தார். இலங்கையின் போர்க் குற்றங்களுடன் தொடர்புடைய மனிதப் புதைகுழி தொடர்பான விவகாரங்களையும் ஆராய்ந்தார். இவ்வாறான நடைமுறைகளுக்குப் பின்னர் அவர் வெளிப்படுத்தியுள்ள இந்தக் கருத்து மிகக் கனதியானது.

மட்டுமல்லாமல், புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச்சட்டம், பாதுகாப்புத் துறைக்குள் செய்யப்படவேண்டிய சீரமைப்புப் பணிகள் என்பன தொடர்பிலும் வோல்கர் தன் அதிருப்தியைப் பகிரங்கப்படுத்தியுள்ளார். இலங்கை அண்மைக்காலமாக அதன் வெளிவிவகாரக் கொள்கையைத் திருத்தியமைத்து, அணிசேரா நாடுகளை அரவணைத்து தனக்கான ஆதரவுத் தளத்தைப் புதிதுபுதிதாக ஏற்படுத்தி வேறுபட்ட பாதையில் பயணித்துக்கொண்டிருந்தது. இதனால், இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டுவந்த குறைந்தபட்ச நடைமுறைகள் கூட நீர்த்துப்போய்விடுமோ என்ற அச்சம் ஈழத்தமிழர்கள் மட்டில் இருக்கவே செய்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வோல்கரின் பிடிதளரா நிலை, ஈழத்தமிழர்களுக்கு ஓர் ஆறுதல் பெருமூச்சே.

அதேவேளை, ஐக்கிய நாடுக்குள் மனித உரிமைகள் பேரவையின் இறுக்கமான பிடிக்குள் இருந்து திமிறி வெளிக்கிளம்பிப் புறப்படுவதற்கு இலங்கை காலாகாலமாக முயன்று கொண்டிருப்பதும் பட்டவர்த்தனமானதே. சட்டவியாக்கியானங்கள், அணிகளைச் சேர்க்கக்கூடிய சந்தர்ப்பங்கள் என்பவற்றை தன் 'அவகாச மனோ நிலையின்' பாற்பட்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வழங்கிக் கொண்டிருப்பதுதான் இலங்கைக்குப் பிடிமானங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது என்பதே உண்மை. இதை உணர்ந்து 'அவகாசத்தை வழங்கும் அட்சயபாத்திரம்போன்று' ஐ.நா. செயற்படக்கூடாது என்பதுதான் ஈழத்தமிழர்களின் இப்போதைய எதிர்பார்ப்பு. ஐக்கிய நாடுகள்மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் என்ற வகையில், வோல்கர் ட்ரக்கின் இந்தப் பயணம், இலங்கை மீதான பிடியை இரட்டிப்பாக இறுக்கக்கூடிய பெருவாய்ப்பு. அதை ஐக்கிய நாடுகள் சபை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# செம்மணிப் புதைகுழியில் படையினர் உடலங்களாம்



## விமல் வீரவன்ஸ கண்டுபிடிப்பு

**கொழும்பு, ஜூன் 28**

**செம்மணிப் புதைகுழியில் அடையாளங் காணப்பட்டுள்ள மனித எலும்புக்கூடுகள் புலிகளால் கொல்லப்பட்ட இராணுவத்தினருடையவையாகக்கூட இருக்கலாம் என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணிப் புதைகுழியில் அடையாளங் காணப்பட்ட மனித எலும்புக் கூடுகள், யாருடையது என்பது இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. சிலவேளை புலிகள் அமைப்பால் கொல்லப்பட்ட தமிழர்களுடையவையாக அவை இருக்கலாம். அவ்வாறு அல்லாவிட்டால் புலிகள் அமைப்பினரால் கொல்லப்பட்ட இராணுவத்தினருடையதாக இருக்கலாம். அப்படியும் அல்லாவிட்டால் புலிகளால் கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் புதைக்கப்பட்ட இடமாக இருக்கலாம். மேலும் போரின் போது கொல்லப்பட்ட புலி உறுப்பினர்கள் புதைக்கப்பட்ட இடமாகக் கூட இருக்கலாம். இந்தநிலையில் அப்பாவித் தமிழ் மக்களே கொன்று புதைக்கப்பட்டுள்ளனர், இது மனித குலத்துக்கு எதிரான செயற்பாடு என்று கூறுவது ஏற்புடையதல்ல- என்றார். (ச-44)

# கீரிச்சம்பா இறக்குமதி

கொழும்பு, ஜூன் 28

நாட்டில் போதுமான அரிசி கையிருப்பு இல்லாததாலும், கீரிச்சம்பா அரிசிக்கான தேவையைப் பூர்த்திசெய்வதற்காகவும், 40 ஆயிரம் மெற்றிக் தொன் கீரிச் சம்பா மற்றும் அதற்கு மாற்றான அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் கூடிய உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைச் செலவுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# நாமல் வழக்கு செப்ரெம்பர் விசாரணைக்கு

கொழும்பு, ஜூன் 28

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக்கை செப்ரெம்பர் 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

ரக்பி விளையாட்டை ஊக்குவிப்பதற்காக இந்திய நிறுவனமான கிரிஷ்டமிருந்து 70 மில்லியன் ரூபாவைப் பெற்றுக்கொண்டு நம்பிக்கையை மீறியதாக நாமல் ராஜபக்சவுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# முன்னாள் தலைவர்கள் இருவர் கைது

ஷிராந்தி ராஜபக்சவின் சகோதரரும் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் முன்னாள் தலைவருமான நிஷாந்த விக்ரமசிங்க, இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். அதேவேளை மீன்வளக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் உபாலி லியனகே, ஊழல் குற்றச்சாட்டு வழக்கில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)



# திரிபோஷா 'கப்கேக்' விரைவில் அறிமுகம்

கொழும்பு, ஜூன் 28

திரிபோஷா நிறுவனம் பல்வேறு சுவைகளில் சத்தான மற்றும் சுவையான திரிபோஷா கப்கேக் தயாரிப்பை அறிமுகப்படுத்தவுள்ளது. நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை இலாபகரமான நிறுவனங்களாக மாற்றுவதற்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட நிறுவன மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ், இலங்கை திரிபோஷா லிமிடெட் நிறுவனம் மீண்டும் தமது செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளது. அதன்படி சொக்லேட், வாழைப்பழம், வெண்ணிலா, ஸ்ட்ராபெரி மற்றும் மாம்பழ சுவைகளில் திரிபோஷா கப் கேக்கள் தயாரிக்கப்படவுள்ளன. (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை - ஆனி 15
29.06.2025
சுபநேரம் : 02.55- 04.25
ராகுகாலம் : 08.55-10.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சின்னவெங்காய இறக்குமதியை அரசாங்கம் கட்டுப்படுத்துக!

## யாழில் நேற்றுப் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஜூன் 28**

**நாட்டில் சின்னவெங்காயத்தின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி அச்சுவேலி பத்தமேனி வெங்காய உற்பத்தியாளர்கள் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.**

தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ஸ்ரீ மோகனிடம் மனுவொன்றையும் கையளித்தனர்.

சின்னவெங்காயச் செய்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவரும் விவசாயிகள் தம்மால் உற்பத்திசெய்யப்படும் சின்னவெங்காயத்துக்கு நிர்ணயமான போதிய விலை கிடைக்காமையால் நாம் பாதிப்படைந்துள்ளோம். சின்ன வெங்காயத்தை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் வரையிலான காலப்பகுதியில் அதிகளவான செலவினங்கள் எமக்கு ஏற்படுகின்றன.

அதனை நிர்ணய விலைக்கு விற்க முடியவில்லை. அரசாங்கத்தினால் வெளிநாட்டில் இருந்து தற்போது சின்னவெங்காய இறக்குமதி செய்யப்படும் நிலை அதிகரித்துள்ளமையால் எமது உற்பத்திக்கான நிர்ணய விலை கிடைக்கவில்லை. எனவே அரசாங்கம் வெங்காய இறக்குமதியை மட்டுப்படுத்தி நிர்ணய விலையைக் கிடைக்கச்செய்யவேண்டும் என்று அவர்கள் தமது மனு வில் குறிப்பிட்டனர். (ச-26,20,66)

# எமது பிரதேசசபையின் சுயாதீனத்தில் தலையீடாதீர்

## வலி.தெற்கில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் உட்படுவதை முற்றாக எதிர்த்து நேற்று சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேசசபையின் கன்னி அமர்வு நேற்று சபையின் தவிசாளர் தியாகராசா பிரகாஸ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டட அனுமதியைப் பிரதேசசபையே வழங்கும். அதில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினர் தலையீடு செய்யக் கூடாது.

தனியார்க் கல்வி நிலையங்கள் அனைத்தும் பிரதேசசபையின் அனுமதியைக் கட்டாயம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

அத்தோடு மக்களின் நன்மைகருதி வியாபார அனுமதிப்பத்திரத்தை ஒருநாள் சேவையின் மூலம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் பிரதேசசபை தலைமைக் காரியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள அமரர் தர்மலிங்கம் மற்றும் நாகலிங்கம் ஆகியோரின் நினைவுதினங்களை பிரதேசசபையே நடத்தும் என்பன தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன . (ச-26)



# நல்லூர்ப் பிரதேசசபையின் கன்னியமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 28


நல்லூர்ப் பிரதேசசபையின் கன்னியமர்வு நேற்று வெள்ளிக்கிழமை நல்லூர்ப் பிரதேசசபைத் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தலைமையில் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

சபை அமர்வுகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக சபைக்குவந்த தவிசாளர் , பிரதித் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் பிரதேசசபை செயலாளர் மற்றும் பிரதேசசபை உத்தியோகத்தர்களினால் மாலை அணிவித்துக்கௌரவிக்கப்பட்டனர். (ச-26)

# ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன்28

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் சஞ்சிகையின் ஆனி மாத 330 ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. (ச-66)



# யாழ்.மாவட்டச் செயலராக ம.பிரதீபன் பொறுப்பேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு நிரந்தர மாவட்டச் செயலராக நியமனம் பெற்ற ம.பிரதீபன் கடந்த செவ்வாய்க்கிழமை சம்பிரதாயபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அவருக்கு சக ஊழியர்களால் வரவேற்பு அளிக்கப்பட்டது. யாழ். மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலர் ஸ்ரீமோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மதத் தலைவர்கள், மாவட்டச் செயலக ஊழியர்கள், பிரதேசசபையின் செயலர்கள் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல்துறைசார் பொறுப்புநிலை அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல மாதங்களாக மாவட்டச் செயலர் பதவி வெற்றிடமாக இருந்துவந்த நிலையில் பதில் மாவட்டச் செயலராகக் கடமையாற்றிவந்த ம.பிரதீபன் சில தினங்களுக்கு முன்னர் யாழ். மாவட்டச் செயலராக நியமிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கான நியமனக் கடிதம் கடந்த 20ஆம் திகதி அமைச்சரவைச் செயலாளர் பெர்னாண்டோவால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-125,20,27-66)

## கொடிகாமம் - பரந்தன் வரையான

# குறுந்தூரப் பயணிகளை ஏற்றிச்செல்லல் கட்டாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

ஏ-9 வீதியில் சேவையில் ஈடுபடுகின்ற யாழ்.- வவுனியா, யாழ்.-முல்லைத்தீவு, யாழ்.- கிளிநொச்சி, யாழ்.- துணுக்காய் வழித்தடப் பேருந்துகள் அனைத்தும் கொடிகாமம் சந்தி தொடக்கம் பரந்தன் சந்தி வரையிலுமான குறுந்தூரப் பயணிகளை ஏற்றிச் செல்லுதல் கட்டாயம் என இ.போ.ச. மற்றும் வட இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் ஆகியவற்றுக்கு வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் க.மகேஸ்வரன் பணித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

குறுந்தூரப் பேருந்து சேவை இல்லாத காரணத்தால் இப் பகுதிப் பயணிகள் நீண்டதூரப் பேருந்துகளை நம்பியுள்ளனர். ஆனால், பல நீண்டதூரப் பேருந்துகள் இந்தப் பகுதியிலுள்ள பயணிகளை ஏற்றாமல் செல்கின்றன.

இதனால் ஏ-9 வீதியில் கொடிகாமம் சந்தியிலிருந்து பரந்தன் சந்திக்கு இடையிலான பகுதிகளைச் சேர்ந்த மக்களும், பாடசாலை மாணவர்களும் தங்களுக்கான போக்குவரத்துச் சேவை சீராகக் கிடைப்பதில்லையென கிளிநொச்சி மாவட்டச் செயலர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். (ச-66,113)

# குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

கொழும்பு , ஜூன் 28

அம்பாந்தோட்டையில் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த புதன்கிழமை வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் திஸ்ஸமஹராமைப் பொலிஸார் தெரிவித்தனர். இவர் மெதகிரிபுர பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தைவார். தகாத உறவில் ஏற்பட்ட தகராறால் இந்தக் கொலை இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
01 . 12 . 1947



உதிர்வு
26 . 06 . 2025

## அமரர் கிருஷ்ணசாமி இராஜகுமாரி

தண்ணீரூற்று மேற்கு. முள்ளியவளை. முல்லைத்தீவை பிறப்பிடமாகவும் பொற் கொல்லர் வீதி. சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற குமாரசாமி கிருஷ்ணசாமி அவர்களின் துணைவியார் கிருஷ்ணசாமி இராஜகுமாரி அவர்கள் கடந்த 26.06.2025 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்பு:
077 600 1175
077 071 0579

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 45363) E

# ஆசிரியையின் சங்கிலி பட்டப்பகலில் அறுப்பு!

## சிறையிலிருந்து வந்த இளைஞர் கைது

யாழ்ப்பாணத்தில் ஆசிரியை ஒருவரது ஒரு பவுண் தங்கச் சங்கிலியை பட்டப்பகலில் அறுத்துத் தப்பியோடிய சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஏழாலை மகா வித்தியாலயத்தில் கடமைபுரியும் குறித்த ஆசிரியர் பாடசாலையில் இருந்து வரும்போது மருதனார்மடம் பகுதியில் வைத்து முகத்தைமூடித் துணியால் கட்டியிருந்த நபரொருவர் அவரது தங்கச் சங்கிலியை அறுத்துச்சென்றுள்ளார். பாதிக்கப்பட்ட ஆசிரியரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் 26 வயதுடைய சந்தேநபர் கைதுசெய்யப்பட்டார். குறித்த சந்தேகநபர் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதாகி 8 மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தபின்னர் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே விடுதலையாகி வந்தவர் என விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-27-125)

## வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் ஹாட்வெயார் நிறுவனத்திற்கு கணினி தரவுநிரற்படுத்துனர் தேவை. (Primary Entry, GRN)

[இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்]

CV Whatsapp செய்யவும்

Whatsapp No - **077 717 0624 , 021 228 3663**

(CS/3459) (G) D'

## வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் ஹாட்வெயார் நிறுவனத்திற்கு கணக்காளர் தேவை.

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CV Whatsapp செய்யவும்

Whatsapp No - **077 717 0624 , 021 228 3663**

(CS/3459) (A) D'


## அருள்மிகு உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில்

### பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

மேற்படி எமது ஆலய பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எமது ஆலய முன் மண்டபத்தில் 20.07.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு இடம்பெற அம்பாள் ஆசி கைகூடியுள்ளது. அன்றைய தினம் கலந்துரையாடப்பட வேண்டிய ஆலய வளர்ச்சியோடு தொடர்பான பிரேரணைகள் மற்றும் விடயங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை எழுத்து மூலமாக 05.07.2025 இற்கு முன்பதாக நேரிலோ அல்லது செயலாளர், பரிபாலன சபை, உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் எனும் முகவரிக்கோ அனுப்பி வைக்கவும். எழுத்து மூலம் வழங்கி நிகழ்ச்சி நிரற்படுத்தப்படாத எவ்விடயங்களும் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

செயலாளர்,
பரிபாலன சபை,
உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில்

(CR 45364) E




# மரண அறிவித்தல்

மலர்வு
01 . 02 . 1954



உதிர்வு
24 . 06 . 2025

## மகாலிங்கம் தயாநிதி

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் தயாநிதி கடந்த 24.06.2025 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா - செல்வரத்தினம் தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - காமாட்சி தம்பதியரின் மருமகளும், மகாலிங்கம் அவர்களின் அன்புத் துணைவியாரும் தயாநிதி (சுவிஸ்), நகுலேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், நவரத்தினம் (சுவிஸ்), அகிலாண்டேஸ்வரி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான இந்திராணி, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் மைத்துனியாரும், வித்யாழினியின் அன்புத்தாயாரும், யசோதரனின் அன்பு மாமியாரும், கவிஷாவின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (29.06.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

51/1 கோசாவில் பிள்ளையார் வீதி
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்

தகவல் :
குடும்பத்தினர்
076 663 9323

(CS 58703) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதப்போட்டி பரீட்சை இன்று

யாழ். ஜுன் 28 வல்வை சிதம்பரா கணிதப் போட்டி 2025 இன் விசேட பரீட்சை இன்று சனிக்கிழமை வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரியில் இடம்பெறவுள்ளது. வல்வை சிதம்பரா கணிதப் போட்டி 2025 இல் தோற்றி சிறப்பு சித்தி பெற்ற மாணவர்களில் முதன்மை மாணவர் தெரிவுக்கான இரண்டாவது பரீட்சையே இன்று காலை 09.30 மணி முதல் 12.30 மணி வரை வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (ச-100)


## வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் ஹாட்வெயார் நிறுவனத்திற்கு டீசல் இயந்திரங்கள் மற்றும் இலத்திரனியல் கருவிகள் (Power Tools) திருத்தக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை.

CV Whatsapp செய்யவும்

Whatsapp No - **077 923 4668 , 021 228 3663**

(CS/34559) (B) D*


## AMENDMENTS NOTICE
## INVITATION FOR BID (IFB) -2025/03
## VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA MANIPAY.
## STAMP DUTY FUND

The following amendments are done to the above titled advertisement published at Uthayan Newspaper on19th June 2025.

| Closing and opening of Bids | Bid Security Validity Period |
|---|---|
| At 10.30 A.M on 2025-07-07 | 22.09.2025 |

The other contents remain unchanged.

Chairman
Local Authority Procurement Committee,
Valikamam South west Pradeshiya Sabha,
Manipay
28.06.2025

# மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 02 . 1950

மறைவு 27 . 06 . 2025

## சுப்பிரமணியம் செல்வராசா

**(ஓய்வு பெற்ற அலுவலக உத்தியோகத்தர் நல்லூர் பிரதேச செயலகம்)**

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், 36/35 4ம் ஒழுங்கை, கலாசாலை வீதி திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்வராசா அவர்கள் நேற்றைய தினம் (27.06.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், வாஹினியின் (முகாமைத்துவ உதவியாளர் யாழ். பல்கலைக்கழகம்) பாசமிகு தந்தையும், ஆதித்தனின் (Junior Excutive, People's Insurance) அன்பு மாமனாரும், வரதராஜனின் சிறிய தந்தையும், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் பாக்கியம், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, சிவராசா ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற குணநாயகம் மற்றும் சிவசுப்பிரமணியம், கிருஸ்ணன், சிவமணி, ஆகியோரின் அன்பு மைத்துனரும், சைந்தவி, கஜானன், கஜலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.06.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**36/35, 4ம் ஒழுங்கை,**
**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல்: குடும்பத்தினர்**
[illegible]
[illegible]

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16 . 03 . 1949

மறைவு 20 . 06 . 2015

## அமரர் ஐயாத்துரை வரதராஜா

திதி - சதுர்த்தி

**(ஓய்வுநிலை பிரதமலிகிதர், திட்டமிடல் பிரிவு மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம், அறங்காவலர், அரியாலை ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலயம்)**

குடும்பத்தின் தலைமகனே குன்றாத ஒளிவிளக்கே
வடமிழந்த தேர்போல் வையகத்தே வாடுகின்றோம்.
நெடுந்துயரம் யாமடைந்து பத்தாண்டுகள் ஆனதுவோ
நிலத்தனிலே உங்கள் நிறைவதனம் காண்பதெப்போ
அழகொழிரும் அன்னைகலா வாணிவாசல் வாராயோ
அணைத்தெடுத்த பிள்ளைகளின் அன்புமொழி கேளாயோ
துணையவளும் சுற்றமும் வாடுவதை அறியாயோ
தூயவரே எம்துயரம் அகற்றிடவே வாரீர்!

**59, கலைமகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

# வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



பிறப்பு 19 . 09 . 1954

இறப்பு 29 . 05 . 2025

கடந்த (29.05.2025) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

## அமரர்
## சின்னப்பு வேலாயுதபிள்ளை (பாலா)

அவர்களின்

அந்தியேட்டி கிரியைகள் கடந்த (26.06.2025) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.06.2025) சனிக்கிழமை முற்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

[illegible]
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

**தகவல் குடும்பத்தினர்**
**077 442 1618**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### வவுனியா- முல்லைத்தீவு

# பேருந்து சேவை பின் குறைபாடுகள் களைவு

வவுனியா ,ஜூன் 28

வவுனியா புதிய பேருந்துநிலையத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் செல்லும் வவுனியா சாலைக்குச் சொந்தமான இ.போ.ச. பஸ்ஸில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் மக்களால் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் வவுனியா மாநகரத் துணைமுதல்வர் ப.கார்த்தீபன் இதுதொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளார். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இ.போ.ச. வவுனியாசாலைக்குச் சென்ற மாநகரசபைத் துணைமுதல்வர் சாலை முகாமையாளருடன் கலந்துரையாடலை முன்னெடுத்ததுடன் கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றையும் சாலை முகாமையாளரிடம் கையளித்தார். இதன்போது மக்கள் சிரமமின்றிப் பயணிக்கக்கூடிய வகையில் பேருந்துசேவை இடம்பெறும் என சாலை முகாமையாளர் உறுதியளித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-22,18)

### 12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில்

# சத்தியக்காடு பொதுச்சந்தைக்குள் கட்டடத்தொகுதி அமைக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 28

**சுழிபுரம் சத்தியகாடு பொதுச்சந்தையில் புதிய கட்டடத்தொகுதியை அமைப்பது என வலிகாமம் மேற்குப் பிரதேசசபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் ச.ஜெயந்தன் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

வலிகாமம் வடக்குப் பிரதேச சபைக்கு 15 மில்லியன் ரூபாவும், வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு 12 மில்லியன் ரூபாவும் செயற்றிறன் அடிப்படையிலான மூலதன மானிய நன்கொடை பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் விசேட ஒதுக்கீடுகளில் கிடைத்துள்ளது. அந்த நிதியைக்கொண்டு மேற்கொள்ளக்கூடிய வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்கள் கோரப்பட்டிருந்தன.

சத்தியகாடு பொதுச்சந்தையில் புதிய சந்தைக் கட்டடத்தொகுதி அமைப்பதற்காக முன்மொழியப்பட்டு, அனுமதி பெறப்பட்டுள்ளது. பிரதேசசபை அதற்கான அனுமதியை வழங்கவேண்டும் என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

அப்போது கருத்துத் தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் சிவகுரு பாலகிருஷ்ணன், எங்களின் திட்டங்கள் சங்கானை, சுழிபுரத்தை மையப்படுத்தியுள்ளன. இந்தச் சந்தையில் ஏற்கனவே கடைகள் வாடகைக்கு விடப்படாதுள்ளன. ஆகவே பரந்துபட்ட அளவில் சிந்தியுங்கள் என்று குறிப்பிட்டார். பிரதேசசபை உறுப்பினர்களான கஜமுகன், இராஜேந்திரகுமார், நாகரஞ்சினி, சர்வானந்தா ஆகியோர் அந்தத் திட்டத்தை முன்னெடுக்கலாம் என்று கருத்துகளை முன்வைத்தனர். அங்கு கருத்துத் தெரிவித்த சபையின் தவிசாளர், சந்தையின் கடைகள் அனைத்தும் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. எமது சபை அமைய முன்னரே இந்தத் திட்டம் அனுமதிபெறப்பட்டுள்ளது. ஆகையால் இந்தத் திட்டத்தை ஏகமனதாக ஏற்றுக்கொள்வோம். எதிர்காலத்தில் வலி. கிழக்கின் அனைத்துப் பிரதேசங்களையும் மைய்படுத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவோம் என்று தெரிவித்தார்.

அதன்பின்னர் சந்தைத்தொகுதியில் புதிய கட்டடத்தொகுதியை அமைப்பதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இந்தச் சந்தைக் கட்டடத்தொகுதி 12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப் படவுள்ளது. (எ-125)

# போராட்டத்தில் குளறுபடி நீதிக்கான அகௌரவம்

## பொ. ஐங்கரநேசன் காட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன் 28

செம்மணியில் நடைபெற்ற அணையாவிளக்கு எழுச்சிப் போராட்டத்தின் இறுதிநாளன்று அரசியல் வாதிகள் சிலரை வெளியேற்ற முற்பட்ட செயலை நீதிக்காகப் புதைகுழியில் காத்திருக்கும் ஆன்மாக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது எனத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போராட்டத்தை ஏற்பாடுசெய்த இளைஞர் குழாம் அரசியல்வாதிகளும் போராட்டத்திடலில் அமர இடம் வழங்கியநிலையில் போராட்டத்தைக் குழப்பும் நோக்குடன் திட்டமிட்டு அங்குவந்த சிலரே இந்த அநாகரிக செயலை அரங்கேற்றியுள்ளனர். இது போராட்ட ஏற்பாட்டாளர்களே அரசியல்வாதிகளை வெளியேற்றியது போன்ற மாயத்தோற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய செயல்கள் இனவிடுதலை அரசியலை மென்மேலும் நலிவுபடுத்தும் - என்றார். (ச-25)

# கண்டாவளையில் கால்நடைகள் திருட்டு!

## மக்கள் விசனம்

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை கால்நடை மருத்துவ அதிகாரிப் பிரிவின் கீழுள்ள பகுதிகளில் அண்மைக் காலமாக மேய்ச்சலுக்காகக் கட்டப்படும் கால்நடைகள் களவாடப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். புளியம்பொக்கனை, பெரியகுளம், தர்மபுரம், உழவனூர், புன்னைநீராவி, கண்டாவளை ஆகிய பகுதிகளிலேயே இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. சம்பவம் தொடர்பாகப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டபோதும் பொலிஸாரால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ச-41-113)

# மரண அறிவித்தல்

தோற்றம்
04
.
05
.
1934



மறைவு
26
.
06
.
2025

## கந்தையா சிதம்பரம்

இயக்கச்சி சங்கத்தார்வயலை பிறப்பிடமாகவும், கண்டாவளை சந்தையடியை நிரந்தர வசிப்பிடமாகவும், நீர்கொழும்பை வாழ்விடமாகவும் கொண்ட குஞ்சம்மாக்கா என்ற திருமதி கந்தையா சிதம்பரம் அவர்கள் (26.06.2025) வியாழக்கிழமை அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்திகேசு - தங்கம்மா தம்பதியரின் செல்ல மகளும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - பார்பதிப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி, குமாரசிங்கம் ஆகியோரின் ஆசை சகோதரியும், தங்கமணி, கமலமணி (கமநல சேவைகள் திணைக்கள ஓய்வுநிலை பெரும்பாக உத்தியோகத்தர்), விக்கினேஸ்வரி (இத்தாலி), காலஞ்சென்ற நவரட்ணம் (ஜேர்மனி), சந்திரகுமார் (சுவிஸ்), விஜயகுமார் (அவுஸ்திரேலியா), சிவகுமார் (கனடா), ஈஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வராசா (ஓய்வுநிலை கிராம சேவகர்), வேலாயுதபிள்ளை (ஓய்வுநிலை உப தாபாலகர்), இராமலிங்கம் (இத்தாலி), கமலாவதி (யேர்மனி), சுந்தரலட்சுமி (சுவிஸ்), சுவேசினி (அவுஸ்திரேலியா), பகீரதி (கனடா), உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்ற சாந்தநாயகி, இராசமணி, காலஞ்சென்ற செல்லம்மா, காலஞ்சென்ற பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நீர்கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டு இறுதிக்கிரிகைகள் நாளை (29.06.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று புளியம்பொக்கணையில் உள்ள அவரது மகளது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக பிற்பகல் 03.00 மணியளவில் கண்டாவளை வெளிக்கண்டல் இந்துமயானத்திற்கு எடுத்துசெல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்.உறவினர்.நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு 0779485675

# நீதிக்கான கண்ணீர்க்கதை ஆவணப்படம் திரையிடல்

மன்னார், ஜூன் 28



வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில், 'நீதிக்கான நீண்ட காத்திருப்பு' எனும் கருப்பொருளில் 'காணாமல் ஆக்கப்பட்டோரின் கண்ணீர்க்கதை' ஆவணப்படம் திரையிடலும்,கருத்துப்பகிர்வும் மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது அமைப்பு,சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஏ-25, 56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். கடுகதி ரயில் சேவை ஜூலை 7 முதல் தினசரி!

**யாழ்ப்பாணம், ஜூன் 28**

**இதுவரை காலமும் வார இறுதி நாள்களில் சேவையை முன்னெடுத்து வரும் குளிரூட்டப்பட்ட நகர் சேர் கடுகதி புகையிரத சேவை எதிர்வரும் 7 ஆம் திகதிமுதல் தினசரி சேவையாக கல்கிசையிலிருந்து காங்கேசன்துறைவரை முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் பிரதான புகையிரத நிலைய அத்தியட்சகர் ரீ.பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை காலமும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் குறித்த சேவை முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்தநிலையில் புகையிரதத் திணைக்களம் மற்றும் துறைசார் தரப்பினரிடம் பொதுமக்கள் விடுத்த கோரிக்கைக்கமைவாக குறித்த சேவை தினசரி முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன்படி எதிர்வரும் 7ஆம் திகதி முதல் கல்கிசை புகையிரத நிலையத்தில் இருந்து காலை 5.15 மணிக்கு தனது சேவையை முன்னெடுப்பதுடன், கொழும்புக் கோட்டையிலிருந்து 5.45 யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணிப்பதுடன் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை மதியம் 11.49 வந்தடையவுள்ளது. அதன்பின்னர் காங்கேசன்துறையை 12.13 க்கு சென்றடையும். மீண்டும் பி.ப. 1.30 க்கு காங்கேசன்துறையிலிருந்து தனது பயணத்தை ஆரம்பிக்கும் குறித்த ரயில்சேவை யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து 2.12க்கு புறப்பட்டு கொழும்பு கோட்டையை முன்னிரவு இரவு 8.33க்கு சென்றடையும். அதேவேளை கல்கிசையை முன்னிரவு இரவு 8.55க்குச் சென்றடையும். குறித்த கடுகதி புகையிரத சேவைக்கான ஆசன முற்பதிவுகள் அடுத்த ஒருசில தினங்களில் மேற்கொள்ள முடியும்.

இதேவேளை இதுவரைகாலமும் 5.45 க்கு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்ட யாழ். தேவி புகையிரதமானது எதிர்வரும் 7ஆம் திகதிமுதல் காலை 6.35 மணிக்கு தனது சேவையை ஆரம்பிக்கும் - என்றார். (ச-125)

# ஆயுதக்குழுக்களை ஒடுக்க நிபந்தனையற்ற ஆதரவு

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளைத் தடுத்து தேசிய பாதுகாப்பையும், மக்கள் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் செயற்பாடுளுக்கு அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இந்த வருடம் இலங்கையில் கொலைகள் அதிகரித்த வருடமாக உள்ளது. பாதாள குழுக்கள் சமூகத்தின் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளன. ஜனநாயக நாடு ஒன்றில் இருக்க வேண்டிய மக்களுக்கான பாதுகாப்பை பலப்படுத்துவதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது.

பாதுகாப்பை பலப்படுத்துவது அமைதியை ஏற்படுத்துவது ஜனாதிபதியின் கடமை. ஆயுதக் குழுக்கள் தேசிய பாதுகாப்புக்கும் மக்களின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக மாறும்போது அரசாங்கத்திடம் அதற்குப் பதிலில்லை. மக்களின் பாதுகாப்பை தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமாகவிருந்தால் நாம் நிபந்தனைகளற்ற அடிப்படையில் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவோம்என்றார். (எ-75)

# குருபூஜை

யாழ், ஜூன் 28

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்தும் மாணிக்கவாசகர் குருபூஜை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாவண்ணை நாவலர் மகாவித்தியாலய அதிபர் க.கலியுகன் கலந்துகொள்ளவுள்ளார். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

# இழப்பீட்டு அலுவலகத்துக்கு உறுப்பினர்கள் உள்ளீர்ப்பு

கொழும்பு, ஜூன் 28

இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தில் காணப்படும் உறுப்பினர்கள் வெற்றிடங்களுக்கு தகைமையுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவத்தை இலங்கை நாடாளுமன்றத்தின் www.parliament.lk என்ற இணையத்தளத்தில் கிடைக்கக்கூடிய 'இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்துக்கு உறுப்பினர்களை நியமித்தல்' எனும் இணைப்பினுள் பெற்றுக் கொள்ளலாம். கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் 'இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்திற்கு உறுப்பினர்களை நியமித்தல்' எனக் குறிப்பிட வேண்டும். அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம், அரசியலமைப்புப் பேரவை அலுவலகம், இலங்கை நாடாளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது constitutional council@parliament.lk க்கு மின்னஞ்சல் மூலமோ ஜுலை 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

# எரிந்த நிலையில் சடலம் மீட்பு

கொழும்பு, ஜுன் 28

மஹறவ - தியாபதேப் பகுதியிலுள்ள வனப்பகுதியில் காரில் எரிந்த நிலையில் ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. குருநாகல் மில்லேவப் பகுதியைச் சேர்ந்த 49 வயதான ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த மரணம் கொலையா அல்லது தற்கொலையா என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

# பாதாளக் குழுக்களுக்கு விரைவில் முற்றுப்புள்ளி

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 28

பாதாளக் குழுக்களுக்கும் போதை பொருள் வியாபாரிகளுக்கும் ஆதரவு வழங்கி வந்த அரசாங்கங்களும், அரசியல்வாதிகளும் இப்போது இல்லை. மக்கள் அவர்களைத் தோற்கடித்துவிட்டார்கள் என்று பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பாதாளக் குழுக்களுக்குப் போதைப் பொருள் வியாபாரிகளுக்கு ஆதரவு வழங்கியவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான். நாங்கள் அவர்களை முற்றாக நீக்கிவிட்டோம். எம்மில் எவரும் இந்தப் பாதாளக் குழுக்களுடன் போதைப்பொருள் வியாபாரிகளுடன் தொடர்பிலில்லை. ஆனால் முன்பு இப்படியில்லை. அரசாங்கங்களே பாதாளக் குழுக்களை இயக்கின. பல அரசியல்வாதிகள் இயக்கினார்கள்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம் பெறுகின்றன. அவை பாதாளக் குழுக்களுக்கு இடையே நடக்கின்றன. சம்பவங்கள் நடந்த உடனேயே பல கைதுகள் நடந்துள்ளன. இந்த விடயத்தில் அரசாங்கம் சிறப்பாகவே செயற்படுகின்றது. பாதாளக் குழுக்களுக்கும் போதைப்பொருள் வர்க்கத்துக்கும் முற்றுப்புள்ளி வைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பல திட்டங்களை வகுத்துள்ளது. விரைவில் அவை தெரியவரும் -என்றார். (எ75)

# மன்னாரை அபிவிருத்திசெய்ய மத்திய அரசின் நிதி அவசியம்

## நகரசபை முதல்வர் கோரிக்கை



**மன்னார், ஜுன் 28**

மன்னார் நகரசபைப் பிரிவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும், வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு வளப்பற்றாக்குறை காணப்படுகின்றது. எனவே மன்னார் நகரசபைக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக்கொள்ள மத்திய அரசு நிதியுதவி அளிக்கவேண்டும் என்று மன்னார் நகரசபை முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்துள்ளார். நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நகரசபைக்குச் சொந்தமான உள்ளக வீதிகள் புனரமைப்பதற்கான வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம். தரவன் கோட்டை, கீரி வரையிலான பாதை பழுதடைந்தநிலையில் காணப்படுவதால் அதனைச் சீர்செய்ய 55 மில்லியன் ரூபாவும், மன்னார் பிரதான பாலத்திற்கு அருகில் காணப்படும் நிலப்பரப்பில் உல்லாசப்பயணிகளை ஈர்ப்பதற்காக முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித்திட்டத்துக்கு 16 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனினும் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதும் நகரசபைக்கான வளங்கள் பற்றாக்குறையாகவுள்ளது. ஜே.சி.பி., உழவு இயந்திரம், ஏனைய வாகனங்கள் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளன.

எனவே பின்தங்கிய மாவட்டமாகவுள்ள மன்னாரை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றால் மத்திய அரசின் நிதியுதவி எமக்குத் தேவை- என்றார். (ச-41-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி...

காணி நிர்ணயச் சட்டத்தின் நான்காம் பிரிவுக்கு அமைவாக, வடக்கிலுள்ள காணிகளைச் சுவீகரிக்கும் வகையில் மார்ச் மாதம் 28ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியானது. அந்தவர்த்தமானியில் குறிக்கப்பட்டுள்ள காணிகளுக்கு உரிமையாளர்கள் இருந்தால், அவர்கள் அது தொடர்பான ஆவணங்களுடன் உரிமைக் கோரிக்கைகளை முன்வைக்குமாறு கோரப்பட்டிருந்தது. இதனால், உரிமைக் கோரிக்கை முன்வைக்கப்படாத காணிகள் அரச காணிகளாக அறிவிக்கப்படும் ஆபத்து காணப்பட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, அந்தத் திட்டத்தை தற்காலிகமாகக் கைவிடுவதாக அரசாங்கம் அறிவித்தது. எனினும், வர்த்தமானி அறிவித்தல் திரும்பப் பெறப்படவில்லை. இதையடுத்து, இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த மனு விசாரணைக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே, குறித்த வர்த்தமானியை தற்காலிகமாக வலிதற்றதாக்கும் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கு அடுத்த விசாரணை ஜூலை மாதம் 2ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அதற்கிடையில் குறித்த வர்த்தமானியை மீளப் பெறுவதற்கான வர்த்தமானியை அரசாங்கம் வெளியிட்டால் அதனை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. (அ-ம-66-26)

## நிலையியல்...

மாநகரசபையின் முதலாவது அமர்வும் நிலையியற் குழுக்களின் தெரிவும் கடந்த 23ஆம் திகதி நடைபெற்றது. அதன்போது நிதிக் குழு, மராமத்து குழு என்பன தெரிவு செய்யப்பட்டதுடன், சுகாதாரக் குழுவை தெரிவு செய்வதில் இணக்கமற்ற சூழல் ஏற்பட்டு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. ஆதலால், மேற்படி குழுவைத் தெரிவுசெய்வதற்காக நேற்று விசேட அமர்வு நடைபெற்றது.

சுகாதாரக் குழுத்தெரிவு நேற்று முடிவடைந்த பின்னர் உறுப்பினர்கள் பலரும் எழுந்து தமது கருத்துகளைத் தெரிவிக்கச் சந்தர்ப்பத்தைக் கோரினார்கள். ஆனால், அது நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்ட விடயமல்ல என்று தெரிவித்த யாழ். மாநகரசபை முதல்வர் மதிவதனி அமர்வை முடித்துவைத்தார்.

இதைத்தொடர்ந்து முதல்வர் செங்கோல் சகிதம் வெளியேற முற்பட்டபோது, மாநகர உறுப்பினர் தர்சானந் அவரை இடைமறித்து தமது கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குமாறு கோரினார். இதையடுத்தே, அமர்வில் குழப்பம் ஏற்பட்டது. (அ-ம-26)

## உயிர்த்த...

வடகல தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரும், சட்டமா அதிபர் திணைக்களத்தினரும் கூட்டாகச் செயற்பட்டு வருகின்றனர்.

பிரதான சூத்திரதாரி யார் என்பது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பல முக்கியமான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. பிரதான சூத்திரதாரிகளை மட்டுமல்ல, அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களையும் நாங்கள் நீதியின் முன்பாக நிறுத்துவோம்.

கத்தோலிக்க மக்களின் கவலைகளும், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் அதிருப்தியும் நியாயமானவை. அவரின் கருத்துகளுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். எமக்கும் கால அவகாசம் அவசியம். எது எப்படி இருந்தாலும் நிச்சயம் பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்படும்' - என்றார். (அ-ம-44)

## படையினரின்...

மனிதப்புதைகுழி தொடர்பில் தற்போது மீண்டும் பேசப்படுகின்றது. இவ்விகாரம் மீளத் தோண்டப்படுவதன் நோக்கம் தான் என்ன? இந்த நாட்டில் போர் நிலவியது. பயங்கரவாதம் இருந்தது. மக்கள் கொல்லப்பட்டனர். படையினர் கொல்லப்பட்டனர். அழிவுகள் ஏற்பட்டன. கடைசியில் படையினர்தான் போரை முடிவுக்கு கொண்டுவந்து அமைதியை ஏற்படுத்தினர்.

செம்மணிப் புதைகுழியில் இருப்பவை யாருடைய சடலங்கள்? பூநகரி மற்றும் ஆனையிறவு மோதலின்போது புலிகளால் படையினர் கொல்லப்பட்டனர். சில உடல்களே கிடைக்கப்பெற்றன. எனவே, செம்மணியில் மீட்கப்படும் மனிதச் சிதிலங்கள் இராணுவத்தினருடையவை என எம்மால் கூறமுடியும். செம்மணிப் புதைகுழியை எதற்காக மீண்டும் தோண்டிக் கொண்டிருக்கின்றனர்? இந்த விடயத்தை தோண்டத்தோண்ட அது யாசகனின் காயங்கள்போல் மாறிவிடும். எனவே, அரசாங்கமும், தமிழ் அரசியல் வாதிகளும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்' - என்றார். (அ-ம-44)

## வோல்கர்...

ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது வழக்கமான ஒன்றாக அமைந்துள்ளது. தம்மால் எடுக்கப்படும் பாரதூரமான முடிவுகள் சரியானவை என்று காண்பித்துக்கொள்வதே இதன்நோக்கம்.

அதாவது தாம் இலங்கைக்குச் சென்று, பல தரப்பினரைச் சந்தித்து கலந்துரையாடி, அதற்கமையவே அறிக்கை தயாரிக்கப்பட்டது எனக் கூறிக்கொள்வதே அவர்களின் எண்ணம். இதற்கு முன்னரும் இதுவே நடந்துள்ளது. நவநீதம் பிள்ளை, அல் ஹுசைன் ஆகியோரும் வந்தனர். அனைத்துத் தரப்பினரையும் சந்தித்தோம் எனக் கூறினாலும் பிரிவினைவாதிகளையும், அடிப்படைவாதிகளையுமே மட்டுமே சந்தித்தனர். அவர்களைத் திருப்திப்படுத்தும் விதத்திலேயே அறிக்கையும் வெளிவந்தது.

தற்போதைய ஆணையாளரும் அதே வழியில்தான் வந்துள்ளார். யாழ்ப்பாணத்துக்குச் சென்று உயிரிழந்தவர்களையும் நினைவுகூர்ந்துள்ளார். வடக்கில் உள்ளவர்கள் மட்டுமே இறந்தனர்? புலிகளால் எவரும் கொல்லப்படவில்லையா? வடக்கில் படையினரின் உடல்கள் இல்லையா? கொல்லப்பட்ட பொலிஸாரின் உடல்கள் இல்லையா?

செம்மணியில் புலிக்கொடிகளுடன்தான் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. பாதுகாப்பு தரப்பில் இருந்த முன்னாள் அதிகாரிகள் இணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமையாளரை சந்திப்பதற்கு அனுமதி கோரியிருந்தனர். அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. சில சட்டத்தரணிகள் குழுவும் கோரி இருந்தது. அந்த கோரிக்கையும் ஏற்கப்படவில்லை. தேசியவாத அமைப்புகளுக்கும் இடமளிக்கப்படவில்லை. மாறாக புலிகளின் சித்தாந்தத்துடன் செயற்படும் நபர்களுடன் மட்டுமே சந்திப்பு நடந்துள்ளது - என்றார். (அ-ம-44)

## பிரதிப்...

யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பணியாற்றிய காளிங்க ஜெயசிங்க கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருடைய இடத்துக்கு கொழும்பில் பணியாற்றிவந்த மாரப்பன நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## அகழ்வுப்...

சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் மீண்டும் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. தற்போதைய அகழ்வுப் பணிகளின்போதும், இதற்கு முன்னரும் அசௌகரியமான - அசாதாரணமான சூழ்நிலைகளில் பணிகள் இடைவிடாமல் மேற்கொள்ளப்படுகின்ற விடயம் தெரிய வந்துள்ளது.

குறிப்பாக, அகழ்வுப் பணிகள் இடம்பெறும் மனிதப் புதைகுழியில் இருந்து சுப்பிடு தூரத்திலேயே மயானத்தின் எரியூட்டும் பகுதி உள்ளது. இதனால், சடலங்கள் எரியூட்டப்படும் வேளைகளில் நிலவும் அசாதாரண சூழலின்போதும் பணியாளர்கள் பணிகளைத் தொய்வின்றியும் பின்னடைவு இல்லாமலும் நிறைவேற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## செம்மணிப்...

தப்பட்ட பின்னர் நேற்றுமுன்தினம் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. நேற்றுமுன்தினம் இரண்டு என்புத் தொகுதிகளும், ஒரு மண்டையோடும் (மூன்று மனிதச் சிதிலங்கள்) அவதானிக்கப்பட்ட பின்னர், நேற்றும் அகழ்வுப் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. நேற்று மேலும் இரு மனிதச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

இதுவரை 18 மனிதச்சிதிலங்கள் முழுமையாக மீட்கப்பட்டு வெளியில் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

துறைசார் நிபுணரும் பேராசிரியருமான ராஜ் சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா அகழ்வுப் பணிகளைக் கண்காணித்து வருகின்றார். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர் ஆகியோரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தமிழ்ப்...

பட்டார். வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் முதலாவது அமர்வு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவந்தினி பாபுவின் முன்னிலையில், நேற்று நடைபெற்றது. தவிசாளர் பதவிக்காக, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் பாலகிருஸ்ணன் பாலேந்திரன் முன்மொழியப்பட்டார்.

இதன்போது தெரிவுகளை இரகசியமாக நடத்துமாறு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கோரிக்கை முன்வைத்தனர். அதற்கு ஆணையாளர் மறுப்பு தெரிவித்த நிலையில் தேசிய மக்கள் சக்தி மற்றும் இலங்கைத் தொழிலாளர் கட்சி, மற்றும் சுயேச்சை குழு உறுப்பினர்கள் 9 பேர் வெளிநடப்பு செய்தனர்.

அவர்கள் வெளிநடப்புச் செய்த பின்னர், சபையில் 18 உறுப்பினர்கள் இருந்தனர். போதிய கோரம் இருந்தமையால் அமர்வு தொடர்ச்சியாக நடத்தப்பட்டது. தவிசாளராக பாலகிருஸ்ணன் பாலேந்திரன் தெரிவுசெய்யப்பட்டார்.

உபதவிசாளராக சங்குக் கூட்டணியின் பாலசுப்பிரமணியம் கோணேஸ்வரி முன்மொழியப்பட்டார். வேறு எவரும் முன்மொழியப்படாததால் அவர் உபதவிசாளராகத் தெரிவானார். (அ-ம-110)

## வடக்கு...

தெரிவு செய்யப்பட்டார். வவுனியா வடக்கு பிரதேசசபையின் முதலாவது அமர்வு, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவந்தினி பாபுவின் முன்னிலையில், நேற்று நடைபெற்றது. தவிசாளர் பதவிக்காக, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் தி.கிருஷ்ணவேணி, தேசிய மக்கள் சக்தியின் சார்பில் ஞானமுத்து அகிலன் ஆகியோர் முன்மொழியப்பட்டனர்.

வாக்கெடுப்பை இரகசியமாகவா, அல்லது பகிரங்கமாகவா நடத்துவது என ஆணையாளரால் கோரப்பட்டபோது, இரகசியமாக நடத்துமாறு தேசிய மக்கள் சக்தியினரும், இலங்கைத் தொழிலாளர் கட்சியினரும் வலியுறுத்தினார்கள். அதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் மறுப்புத் தெரிவித்ததுடன், பெரும்பான்மையின் அடிப்படையிலேயே செயற்படமுடியும் என்று தெரிவித்தார். இதையடுத்து தேசிய மக்கள் சக்தியினரும், இலங்கைத் தொழிலாளர் கட்சியினரும் என ஒட்டுமொத்தமாக 8 உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

அவர்கள் வெளிநடப்புச் செய்த பின்னர், சபையில் 15 உறுப்பினர்கள் இருந்தனர். போதிய கோரம் இருந்தமையால் அமர்வு தொடர்ச்சியாக நடத்தப்பட்டது. அனைவரும் கிருஷ்ணவேணிக்கு ஆதரவைத் தெரிவித்தனர். இதையடுத்து அவர் தவிசாளராகத் தெரிவானார்.

அவருக்கு தமிழரசுக் கட்சியின் 5 வாக்குகளும், சங்கு கூட்டணியின் 3 வாக்குகளும் ஐக்கிய மக்கள் சக்தியின் 2 வாக்குகளும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 4 வாக்குகளும், சர்வஜன அதிகாரத்தின் ஒரு வாக்கும் கிடைத்தன. உபதவிசாளராக தமிழ்த் தேசியப் பேரவையின் உறுப்பினர் விநாயகமூர்த்தி சஞ்சுதன் முன்மொழியப்பட்டு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

குறிப்பு: இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

"நாங்கள் உங்களோடு"

ஆர்க் .என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

## வேலையாட்கள் தேவை

காட்வெயார் கடைக்கு

1. பொருட்கள் ஏற்றுவதற்கும் எடுத்துக் கொடுப்பதற்கும் ஆள்
2. மனேஜர், பில்கிளார்க் (கணனி)
3. கணக்காளர்
4. லேத் ஒப்றேட்டர், வெல்டர்

+94772523155

## காணி விற்பனை

கொக்குவில் கிழக்கு சம்பியன் வீதியில் K.K.S வீதியிலிருந்து 200m தூரத்தில் இரண்டு துண்டுகளாக பிரிக்கப்பட்ட [2 பரப்பு, 1 3/4 பரப்பு] சிறந்த சுற்றுச் சூழலைக் கொண்டதும் ஆவணங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டது மான காணித் துண்டுகள் உடன் விற்பனைக்கு.

பார்வையிடும் நேரம் 06.00 a.m - 06.00 p.m

விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு 075 042 7547

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம்
பெண் - 2001. ஆயிலியம்.
கிரகபாவம் - 10
வெளிநாட்டு மணமகன் தேவை
பெண் - 1994. 7ல் சூரி/செவ்.
கிரகபாவம் - 95
உள்ளூர் மணமகன் தேவை

தொடர்பு: 071 205 2313
(Normal Call, Whatsapp)

## வீடு வாடகைக்குத் தேவை

கல்வியங்காடு. இருபாலை. கைதடி. கச்சேரி. அரியாலை. கொழும்புத்துறை பகுதியில் 2-4 அறைகளுடன் கூடிய தனிவீடு இணைக்கப்பட்ட குளியலறையுடன் தேவை.

தொடர்புகளுக்கு:
077 728 4196


## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 11 . 1944

மறைவு 22 . 06 . 2025

### செல்வராசா கமலாதேவி

யாழ்ப்பாணம் சரவணை கிழக்கு வேலணையை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் stains ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்வராசா கமலாதேவி அவர்கள் (22.06.2025) அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகமுத்து செல்வராசா அவர்களின் அன்பு மனைவியும், தெட்சணாமூர்த்தி, பத்மாவதி, ஜெயதேவி, பேரின்பநாயகி, மோகனதாஸ் ஆகியோரின் அன்புச்சகோதரியும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் கடம்பவனநாதன், விஜயபாலன், கேமா மற்றும் காலஞ்சென்றவர்களான (கரம்பன்) பாக்கியம், ஜானகி, மாதவி, நாகம்மா, மகேஸ்வரி, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாந்தி காலஞ்சென்ற ஜெயக்குமார், மற்றும் கிருஸ்னகுமார், நந்தினி, உஷா, சுவைதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தனஞ்செயன், சிவசக்தி, ரமேஸ், உதயன், மகிந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், இதயானந்த் - அரிச்சனா, லோகானந் - கீதா, தக்ஷாயனி - பிரசாந், செல்வானந், நிவேதாயினி - தியானன், செல்விகா, மாதுசி - விநோத், மிதுஷா, மோகனா, டிலான், அனோஜ், உதயங்கா, உதயவேணுகா, அச்செயன், மதுஷ், மஜீவ், மவிசன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், ஆனா, இராவன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (01.07.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.30 - 11.30 மணியளவில் Crematorium des, Joncherolles villetaneus France ல் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 12.15 - 01.10 மணியளவில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: தனஞ்செயன் சாந்தி (மகள்) 00447405890980
செல்லத்துரை தனஞ்செயன் (மருமகன்) 00447466276148

# எம்.பி.யாகும் எண்ணம் ஒருபோதும் கிடையாது

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

நாடாளுமன்ற உறுப்பினராகும் எண்ணம் இருந்திருந்தால் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்திருப்பேன், அல்லது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் இணைந்திருப்பேன். எனக்கு அந்த எண்ணம் இல்லை என்று பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இந்த ஆட்சியைக் கொண்டுவருவதற்கு நான் பாடுபட்டவன் அல்ல. நான் ஜனாதிபதி தேர்தலில் தனியாக போட்டியிட்டேன். அப்போது இருந்த பிரபல்யமான கட்சிகளுக்கு எதிராகவே நான் பிரசாரம் செய்தேன். தற்போதைய அரசாங்கம் வெல்வதற்கு அதுவும் உதவியது என்று நினைக்கின்றேன்.

தற்போது அரசாங்கத்தில் உள்ளவர்கள் வெல்வதற்குக் கடும் முயற்சி செய்துள்ளனர். முயற்சி செய்தவர்கள் பதவிகளை வகிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் உள்ளேன். அவர்களின் வெற்றியில் பங்குகேட்பது சரியல்ல. அரசாங்கத்துடன் இணைய வேண்டும் என்று எனக்கு அழைப்பு வந்தது என்று தகவல்கள் பரப்படுகின்றன. அவற்றில் எந்த உண்மையும் இல்லை.

தற்போதைய அரசியல் முறைமையை மாற்றுகின்ற திட்டத்துக்கு ஆதரவு வழங்குவதே எனது தேவையாக இருந்தது. அது நான் அரசியலுக்கு வந்ததில் இருந்து எனது தலைக்குள் இருந்தது. அதற்காகவே நான் இருந்த இடத்தில் இருந்து விலகி எனது பணத்தையும் நேரத்தையும் செலவழித்துப் பரப்புரை மேற்கொண்டேன் - என்றார். (எ-75)

# வடக்கில் முதலிடுவோருக்கான வளத்தைத் தயார்ப்படுத்துங்கள்!

### வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 28

ஆட்சிமாற்றத்தின் பின்னர் முதலீட்டாளர்களுக்கான சாதகமான சூழல் வடக்கில் உருவாகிவருகின்றது. முதலீட்டாளர்கள் இங்கு முதலிடும்போது அவர் களுக்குரிய தொழிற்படையை, மனித வளத்தைத் தயார்படுத்தவேண்டிய தேவை எழுந்துள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தொழில் மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில், வட மாகாண சபைப் பணியாளர்களுக்கான 'தர முகாமைத்து வம் கருத்துகளிலிருந்து சான்றிதழ் வரை' எனும் தலைப்பிலான பயிற்சிப்பட்டறை வட மாகாண சபையின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ச-25,66)

# அரசைக் கவிழ்க்க ஒன்றிணையுங்கள்

### ஐ.ம.சக்தி அழைப்பு

கொழும்பு, ஜூன் 28

இந்த அரசைக் கவிழ்க்கவேண்டும் என்றால் வலதுசாரிக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற மரிக்கார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

2010 இல் மஹிந்த அபார வெற்றியை அடைந்தபோது அவரை இனி யாரும் கவிழ்க்க முடியாது என்று சொன்னார்கள். ஆனால் எல்லோரும் ஒன்றுசேர்ந்து கவிழ்த்தார்கள்.

அப்படியான ஒரு காலம் வரும். அதற்கான தேவையான நடவடிக்கைகளை இப்போதே எடுக்கவேண்டும். வலதுசாரி சிந்தனையு டைய எல்லாத் தரப்பையும் ஒன்றுசேர்க்கவேண்டும் - என்றார். (ச-75)

## மோட்டார்...

துள்ளார். யாழ்ப்பாணம் - ஈச்சமோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஜீவராஜ் மேரி திரேசா (வயது- 52) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 19ஆம் திகதி மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது எதிரில் வந்த சைக்கிளுடன் மோதுண்டு அவர் விபத்துக்கு உள்ளாகியிருந்தார்.

இதையடுத்து, காயங்களுடன் மீட்கப்பட்ட அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## இளைஞர்...

டிப் படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 23 வயதுடையவர் அவரிடம் இருந்து 60 போதைமாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. (அ-ம-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.